DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : DVOP 10/2023

Petitioner Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வசிந்து | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சிவா | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 20/07/2026

**மனுதாரர் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1) கடந்த 08.03.2024 ஆம் தேதி அன்று நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உண்மையென உறுதி கூறி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 16.02.2023 ஆம் தேதியிட்ட Domestic incident Report–ல் ஒவ்வொரு வரியையும் படித்து சரி பார்த்து உண்மையென கூறி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். கடந்த 08.02.2023 ஆம் தேதி அன்று மாண்பமை ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்தில் Restitution of Conjugal Right மனுவினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கடந்த 09.02.2023 ஆம் தேதி அன்று மாவட்ட சமூக நல அலுவலகத்தில் எதிர் மனுதாரர் மீது குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2) கடந்த 10.02.2023 ஆம் தேதி அன்று அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒட்டன்சத்திரத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் Domestic incident Report மீதான விசாரணையின் போது எதிர்மனுதாரர் இல்லாமலேயே ஒரு தலைபட்சமாக முடிக்கப்பட்டதற்கு நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான், தேதி சரியாக ஞாபகம் இல்லை. கடந்த 10.03.2023 ஆம் தேதி அன்று மாவட்ட சமூக நல அலுவலகத்தில் நடந்த விசாரணைக்கு நான் வந்தேனா என்றால் இல்லை, அன்று எனது மகனுக்கு உடல்நிலை சரியில்லை அதனால் வரவில்லை. 10.03.2023 ஆம் தேதிக்கு பின்னர் நான் கொடுத்த புகாரின் மீது விசாரணைக்காக பாதுகாப்பு அலுவலரை தொடர்பு

கொண்டு கேட்டேனா என்றால் இல்லை. நான் ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வாழ விருப்பமில்லை என்று தெரிவித்த நிலையில் பாதுகாப்பு அலுவலரிடம் வாழ விருப்பமில்லை என்று புகார் கொடுக்கும்போதே சொன்னேனா என்றால் இல்லை.

3) நான் மாண்பமை ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்தில் Restitution of Conjugal Right மனுவினை தாக்கல் செய்த விவரத்தை பாதுகாப்பு அலுவலரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் DIR மற்றும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக Restitution of Conjugal Right மனுவினை தாக்கல் செய்துள்ள விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கடந்த 08.02.2023 ஆம் தேதி அன்று சேர்ந்து வாழ வேண்டும் என்று மனு தாக்கல் செய்துவிட்டு கடந்த 09.02.2023 ஆம் தேதி அன்று எதிர்மனுதாரர் மீது குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் புகார் கொடுத்து இருப்பது சட்டத்தை விதிமுறைகளை தவறாக பயன்படுத்தும் யுத்தி என்றால் சரியல்ல.

3) நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன் என்றால் சரிதான். என்ன படித்துள்ளேன் என்றால் Bachelor of Computer Application. நான் பணிபுரிந்த மருத்துவமனையின் பெயர் என்னவென்றால் N.P.மருத்துவமனை. நான் எப்போது அங்கு வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 01.03.2026 ஆம் தேதி. பணியை விட்ட தேதி என்னவென்றால் 31.03.2026 ஆமு தேதி. நான் வேலைக்கு சேர்வதற்கு எனக்கு Joining Letter கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் வேலைவிடுவதற்காக Resignation Letter கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு ESI, PF Account உள்ளதா என்றால் இல்லை. எதற்காக வேலையை விட்டேன் என்றல் எனதுமகளை பள்ளிக்கு அனுப்புவது சிரமமாக இருந்தது அதனால் வேலையை விட்டுவிட்டேன். நான் பணியை விட்ட பிறகு வேலைக்கு விண்ணப்பித்தேனா என்றால் இல்லை.

4) N.P. மருத்துவமனையில் எவ்வளவு சம்பளம் பெற்றேன் என்றால் மாதம் ரூ.7,000/— ஆகும். நான் நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவரின் மாதம் ரூ.65,000— என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிர்மனுதாரரின் 01.03.2021 ஆம் தேதி முதல் 31.03.2021 க்கான மாத சம்பள ரசீதில் மாதம் ரூ.18,303/— என்று குறிப்பிடப்பட்டுளளது என்றால் சரிதான். எனது திருமணத்தின் போது எதிர்மனுதாரர் ரூ.60,000/— மாதம் சம்பளம் பெறுவதாக சொல்லித்தான் திருமணம் செய்து கொண்டார். **01.03.2021 ஆம் தேதி முதல் 31.03.2021 க்கான மாத சம்பள ரசீது எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 16.06.2021 ஆம் தேதி அன்று எதிர்மனுதாரர் வீடு கட்டுவதற்காக ரூ.10,00,000/— கடனாக பெற்றார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் வீடு கடனுக்காக மாத தவணை எவ்வளவு என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எனது புகார் மனுவிலோ நிரூபண வாக்குமூலத்திலோ எனது கணவர் வீட்டு கடன் பெற்றதாக

குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

5) இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரரான வசந்தி எங்கு குடியிருக்கிறார் என்றால் எங்களுடன் தான் குடியிருந்தார். என்னிடம் காட்டப்படும் 2ம் எதிர்மனுதாரரின் குடும்ப அட்டையில் அவரது முகவரி அக்கரைப்பட்டி, திண்டுக்கல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **2ம் எதிர்மனுதாரரின் குடும்ப அட்டை எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொடுத்தது அக்கரைப்பட்டியில் தான். ஆனால் 2ம் எதிர்மனுதாரரும் அவரது இரு மகன்களும் என்னுடனும், எதிர்மனுதாரருடனும் ஒன்றாக குடியிருந்து வந்தார்கள். இந்த வழக்கின் 3வது எதிர்மனுதாரரான சிவகாமி நிலக்கோட்டையில் குடியிருந்தார் என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரே குறுக்கு விசாரணை செய்தார். வேண்டுகேளுக்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.20 18:20:41 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 20/07/2026